பாட நூல்கள் விற்பனையாகின்றன

குழந்தைகளுக்கான புதிய சுற்றுநூற் கல்வி

1ம் வகுப்பு 2ம் ஆண்டு

2ம் வகுப்பு 3ம் ஆண்டு

3ம் வகுப்பு 4ம் ஆண்டு

4ம் வகுப்பு 5ம் ஆண்டு

5ம் வகுப்பு 6ம் ஆண்டு

8ம் ஆண்டு புதிய பாடத் திட்டத்திற்கானது.

வெளியீடு: ஞானசுரபி புத்தகக் கம்பனி, யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

மலர்: 1 ... வைகாசி 4 ஞாயிற்றுக்கிழமை ... (18 05 1986) UTHAYAN A RIVERY TAMIL DAILY இதழ்: 154


# —இயக்கச்சியில்—

# ஒரு மணி நேரமாக

# உக்கிர மோதல்

## இரு சிப்பாய்கள் பலி;

## பொதுமக்களிலும் ஒருவர் மரணம்

### பஸ்கள் திருப்பி அனுப்பப்பட்டன

— அலுவலகச் செய்தியாளர்: பி. வனிதராஜன் —

யாழ்ப்பாணம், மே 18

இயக்கச்சிக்கு அண்மையில் நேற்றுக்காலை ஆயுதப் படையினருக்கும், போராளிகளுக்கும் இடையில் சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக உக்கிரமான மோதல் இடம் பெற்றது

இந்த மோதலில் இரண்டு சிப்பாய்கள் பலியானார்கள். மோதலின் விளைவாக வயோதிபர் ஒருவரும் மரணமானார்.

இயக்கச்சியில் மோதல் நடந்ததால் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்ற பஸ்கள், வாகனங்கள் யாவும் திருப்பி அனுப்பப்பட்டன.

இச் சம்பவம் பற்றி அறியப்படுவதாவது

நேற்றுக்காலை ஆனையிறவு தடை முகாமிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட ஆயுதப்படையினர் கவச வாகனங்கள் சகிதம் நடைபவனியாக யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

இயக்கச்சிக்கு அண்மையில் படையினர் வந்து கொண்டிருந்த வேளை போராளிகளுக்கும் படையினருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது.

மோதல் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக உக்கிரமாக நடந்தது.

மோதலின் போது குண்டுகள் வெடித்தன. துப்பாக்கிகள், மோர்ட்டர் போன்றவை தாராளமாகப் பாவிக்கப்பட்டன. அப் பகுதி போர்க்கள...

(4 ஆம் பக்கம் பார்க்க)

3 முகாம்களிலிருந்து வெளியேறும்

## சிப்பாய்கள் முயற்சி முறியடிக்கப்பட்டது

### 2 போராளிகள் மரணம்

### விடுதலைப் புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், மே 18

பலாலி, ஆனையிறவு, காரைநகர் முகாம்களில் இருந்த சிப்பாய்கள் வெளியேறி வரும் முயற்சி நேற்று எம்மால் முறியடிக்கப்பட்டது.

இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

அறிக்கை விவரம் வருமாறு:-

தமிழ் மக்களை அழித்தொழிக்கும் நோக்குடன் நேற்று பல இராணுவ முகாம்களில் இருந்தும் அரச கலிப்படைகள் புறப்பட்டன. விமானப் படையின் 3 ஹெலிகொப்டர்களும் இதில் ஒத்துழைப்பு வழங்கின.

... தோழர்களின் தீரமிகு, இயக்கங்கள் முறியடித்தன.

நேற்றுக்காலை ஆனையிறவில் இருந்து பல ... இராணுவத்தினர்

(4 ஆம் பக்கம் பார்க்க)



## கடற்படையினர் - போராளிகள்

## காவலூரில் மோதல்

### ஷெல் தாக்குதலில் சிவில் தொழிலாளி பலி

நல்லூர், மே 18

காவலூரில் கடற்படையினர் - போராளிகள் இடையே நேற்று மோதல் ...

இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

கோண்ட சம்பவம் நேற்று நடைபெற்றது. இதில் ஒரு பேர் காயம் அடைந்தனர் ஒருவர் கொல்லப்பட்டார்.

சம்பவம் பற்றி அறியப்படுவதாவது:

நேற்றுக் காலை 9 மணி அளவில் காரைநகர் கடற்படையைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட கடற்படையினர் ... வந்து காவலூர் கரையோரங்களில் இறங்கினர்.

இவர்களை எதிர்கொ...

... போராளிகள் தரப்பில் ... ஆயுதங்கள் ... தாக்கப்பட்டனர் ... தெரியவருகிறது.

... காவலூர் ... தொழிலாளி (60 வயது) என்பவர் "ஷெல்" தாக்குதலுக்கு இலக்காகி மரணமானார்.

மேலும் ஐந்து பேர் காயமடைந்தனர் ... வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர் என்றும் தெரிய வருகிறது.

இச் சம்பவத்தினால் காவலூர் கரையோரப் பகுதிகளில் பெரும் பதற்ற நிலையேற்பட்டது.

## திருமலையில் வயர்லஸ் சாதனம் அபகரிப்பு

திருகோணமலை, மே 18

திருகோணமலைத் துறைமுக அதிகாரசபையின் மட்டக்களப்பு அலுவலகத்தில் உள்ள கம்பியில்லாத் தந்தி (வயர்லஸ்) தொடர்பு சாதனத்தை இனந்தெரியாத நபர்கள் அபகரித்துச் சென்றுள்ளதாக ...

ஆயுததாரிகள் சுமார் 15 இளைஞர்கள் அடங்கிய கோஷ்டி ஒன்று இரவு 12 மணி அளவில் அலுவலகத்தினுள் புகுந்தது.

அங்கு கடமையில் இருந்த 6 ஊழியர்களை மிரட்டி அறை ஒன்றினுள் பூட்டிவைத்து ... வயர்லஸ் சாதனத்தை எடுத்துச் சென்றனர்.

... இரவு உடனடியாக ... மூலம் அறிவிக்கப்பட்டது.

### சுபநேரம்

18-05-1986

ஞாயிற்றுக்கிழமை

சுபநேரம்:

8 53 முதல் 10 23 வரை

ராகுகாலம்:

4 83 முதல் 5.53 வரை

இலவ ... இரவுக்கும் பொருந்தும்

தவமி பிறிவகள் 1 35 வரை

நோன்பு நேரம்

சஹர் - 4 18

மஃரிப் - 6.21

# குண்டுவீச்சு விமானங்கள்

# ஹெலிக்கொப்டர்கள் பறக்க

# யாழ் நகரில் பதற்றம்

### தாக்குதலில் இருவர் காயம்

அலுவலகச் செய்தியாளர் கே இரத்தினராஜலிங்கம்

யாழ்ப்பாணம், மே 18

யாழ் நகரில் நேற்று குண்டு வீச்சு விமானங்கள் மேலே பறக்க கோட்டை முகாமில் இருந்த சிப்பாய்கள் நகருக்குள் வர முயற்சித்தனர்.

இச்சம்பவம் நண்பகல் சுமார் 11 30 மணி அளவில் நடைபெற்றது

சம்பவம் பற்றி அறியப்படுவதாவது:-

நாகதீவுப் பக்கமாக இருந்து பறந்து வந்த இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் பக்கவாட்டில் பறந்து யாழ்நகரை நான்கு ஐந்து முறைகள் பறந்து சுற்றி வட்டமிட்டன

முதல் முறையாக யாழ் நகரில் பறந்து திரிந்த இந்த விமானங்களினால் மக்கள் பதற்றமடைந்தனர்.

இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திய சிப்பாய்கள் முகாமிலிருந்து வெளியே வர முயற்சித்தனர்.

இதனைக் கண்ட போராளிகள் குண்டுகளை வெடிக்க வைத்தனர்

குண்டு வீச்சு விமானங்களை நோக்கியும் துப்பாக்கியால் சுட்டனர்.

அதன் பின்னர், விமானங்கள் பலாலிப் பக்கமாக பறந்து சென்றன.

முகாமில் இருந்தும் "ஷெல்" தாக்குதல்களும் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டனர்

இருவருக்குக் காயம் ஏற்பட்டது.

"ஷெல்" குண்டு...

(4 ஆம் பக்கம் பார்க்க)

### கொழும்பில் நேற்று 100 பேர் கைது

கொழும்பு, மே 18

கொழும்பின் நேற்று நடந்த தேடுதலில் மன்னார் தமிழர் உட்பட சுமார் 100 பேர் வரையில் கைரேகைக்கு பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

தமிழர் செறிவான ... வாழும் ... கொட்டாஞ்சேனை பகுதிகளில் பொலிஸார் தேடுதலில் ஈடுபட்டனர்.

### அநுராதபுரத்தில் இருந்து வடக்கு நோக்கி சிப்பாய்கள்

யாழ்ப்பாணம், மே 18

அநுராதபுரத்திலிருந்து நவீன ஆயுதங்கள் சகிதம் நூற்றுக்கணக்கான சிப்பாய்கள் வடபகுதி நோக்கி நேற்று மாலை புறப்பட்டு வந்து கொண்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

இவர்கள் நடைபவனியாகவும் வாகனங்களிலும் வந்துகொண்டிருப்பதாகவும் ஹெலிகொப்டர்கள் பாதுகாப்பு கொடுத்து வருவதாகவும் தெரியவருகின்றது.

### வவுனியா வந்த குண்டு வீச்சு விமானங்கள்

யாழ்ப்பாணம், மே 18

நேற்று மாலை வவுனியா விமானப்படை முகாமிற்கு இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் வந்து சேர்ந்தன.

இக் குண்டுவீச்சு விமானங்கள் இன்று யாழ்ப்பாணம் செல்லலாம் என அறியப்படுகின்றது.

முக்கிய அரச அலுவலகங்களில்

# தமிழருக்கு வேலைவாய்ப்பு இனி இல்லை?

## ஏற்கனவே பலர் கட்டாய லீவில்

கொழும்பு, மே 18

அரசாங்க நிர்வாகம், விமான நிலையம் மற்றும் முக்கிய அரச நிறுவனங்களில் தமிழர்களுக்கு வழங்கப் படமாட்டா.

இப்படி அரச உயர் ... தமிழ் ... நிர்வாகம் ... வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

இதனிடையில் ...

(4 ஆம் பக்கம் பார்க்க)

### அரசாங்க அறிவிப்பு

கொழும்பு, மே 18

இயக்கச்சி மோதலில் ஒரு படைவீரர் இறந்ததாகவும், 3 பேர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இறந்த படைவீரரின் பெயர் விபரமில்லை

மோதலில் இடைப்பட்ட பொதுமக்களில் ஒருவரும் மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், காரைநகர் ஆகியவற்றில் சில பகுதியிலும் தீவிரவாதிகளுடன் இடையில் மோதல் இடம் பெற்றதாகவும் அரசாங்கம் அறிவித்தது.

அப்போது, கொழும்பில் இருந்த தமிழ் ஆட்கள் எல்லோரையும் ... பின்னர் ... அரசாங்கமே அனுப்பி வைக்க வேண்டும் ... முடிவெடுப்பதோ பின்னே...

### வயாவிளானில் காயமடைந்த நால்வர்

நல்லூர், மே 18

நேற்று வயாவிளானில் நடைபெற்ற 'ஷெல்' தாக்குதல், ஹெலிகொப்டர் தாக்குதலில் ... நால்வர் காயமடைந்து யாழ் ... வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்

விவரம் வருமாறு:-

இராஜரத்தினம் ஜெயரூபன் (18 வயது) ...

... ஜெயா (18 வயது) ...

... (65 வயது) ...

இவர் 'ஷெல்' தாக்குதலுக்கு இலக்கானார்.

இராஜேந்திரன் (வயது 31)

## வயாவிளானிலும் நேற்று நேரடி மோதல்

நல்லூர், மே 18

வயாவிளானிலும் நேற்று போராளிகள் - சிப்பாய்கள் நேரடி மோதல் நடைபெற்றது

சம்பவம் பற்றி அறிய வருவதாவது:

நேற்றுக்காலை பலாலி முகாமில் இருந்து வெளியேறிய சிப்பாய்கள் கவச வாகனங்கள் சகிதம் வயாவிளான் பக்கமாக முன்னேறி வந்தனர்.

இவர்களுக்கு போராளிகள் ... கொண்டிருந்தனர்.

வயாவிளானுக்கு முன்னேறி வந்த சிப்பாய்கள் போராளிகளின் நேரடித் தாக்குதலுக்கு ஈடுபட்டனர்

சிப்பாய்களும் திரும்பத் தாக்குதல் நடத்தினர்

நேற்று மாலை வரை மோதல் விட்டுவிட்டு ... நடந்து கொண்டிருந்ததாகத் தெரியவருகின்றது.

... ஹெலிகொப்டர் ... துப்பாக்கிச் சூடு ...

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் அறுவர் சுட்டுக்கொலை

### வீடுகள் எரிக்கப்பட்டன

—மட்டக்களப்பு மாவட்ட செய்தியாளர்—

மட்டக்களப்பு, மே 18

மட்டக்களப்புப் பகுதியில் ... விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதலில் 6 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று மட்டக்களப்பு செய்தியாளர் தெரிவித்தார்.

... வீடுகள் எரிக்கப்பட்டன ... பொதுமக்கள் என்றும் ... அறிவிக்கப்பட்டது.

இதேவேளை ... கொல்லப்பட்டவர்கள் 6 பேரும் பொதுமக்கள் என்றும் ... தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மட்டக்களப்பு ...

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மனைவியின் கண்முன் துடிதுடித்து இறந்த கணவன்

நல்லூர், மே 18

சம்பவ தினம் ... வீட்டிற்குப் போனபோது "ஷெல்" ... கணவன் மனைவியின் கண் முன்னால் துடிதுடித்து பலியானார்.

நேற்று வயாவிளானில் நடைபெற்ற சம்பவத்தில் இறந்தவர் ... வேலுப்பிள்ளை தங்கம்மா (65 வயது) என்பவர் இப்படிச் சென்றார்.

இவருக்கு முதுகிலும் தாடையிலும் காயங்கள் ஏற்பட்டன

யாழ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் பற்றி இவர் மேலும் சொன்னதாவது:

நேற்று பகல் 12 மணி அளவில் பலாலிப் பக்கமாக ... வந்த ... ஷெல் ... அருகே இருந்த அம்மன் கோவிலில் ...

அப்பொழுது ... பக்கமாக ...

(4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயத்துடிப்பாக வரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

